| English | Tamil |
|---|---|
| | |
| **Welcome** to **Refugee Status Seekers** | **அகதி அங்கீகாரம் வேண்டுவோரை வரவேற்கிறோம்** |
| Public Health Screening Clinic | பொது உடல்நல மருத்துவக்கூட ஆய்வகம் |
| Auckland Regional Public Health Service | ஆக்லாந்து பொது உடல்நல மருத்துவ சேவை |
| ***Welcome** to the*<br>***Refugee Status Seekers***<br>***Public Health Screening Clinic*** | **அகதி அங்கீகாரம் வேண்டுவோரை**<br>**பொது உடல்நல மருத்துவக்கூட ஆய்வகத்திற்கு**<br>**வரவேற்கிறோம்** |
| The clinic is staffed by doctors and nursing staff who will carry out *health screening and refer you as required to other appropriate health services.* | மருத்துவக்கூடத்தினுடைய மருத்துவர்களும் செவிலியர்களும், உங்களுடைய *உடல்நலனை பரிசோதனை செய்து, உங்களுக்கு உரிய பிற உடல்நல சேவைகளுக்குப் பரிந்துரைப்பார்கள்.* |
| The Clinic is **by appointment only**. Appointments are on Tuesday and Friday mornings. | இம்மருத்துவக்கூடம் **முன்அனுமதி பெற்றோருக்கு மட்டுமே.** செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமை காலை நேரங்களில் முன்அனுமதி ஏற்பாடு உண்டு. |
| **To arrange or change your appointment, please telephone 276-6719 and ask to speak to the refugee health clerk.** | **நீங்கள் முன்அனுமதி வாங்கவும் அல்லது நேரமாற்றம் செய்யவும், தயவு செய்து 276-6719 என்கிற எண்ணுக்கு போனில் தொடர்பு கொண்டு அகதி உடல் நல எழுத்தரிடம் பேச வேண்டும் என்று கேளுங்கள்** |
| Health Tests | உடல்நல பரிசோதனைகள் |
| Several tests are taken to check your health. If there are any problems you will be treated at the Clinic or at a Hospital. Some treatment may continue after you have left the Clinic. | உங்கள் உடல்நலனை சரி பார்க்க பல பரிசோதனைகள் செய்யப்படும். உங்களுக்கு பிரச்சனைகள் இருந்தால் மருத்துவக்கூடம் அல்லது மருத்துவமனையில் சிகிச்சை செய்யப்படும். சில சிகிச்சைகள் நீங்கள் மருத்துவக்கூடத்திலிருந்து திரும்பிய பின்னரும் தொடரும். |
| *If you:* | *உங்களுடைய:* |
| have any health concerns, | உடல்நலம் சம்பந்தமான ஏதாவது கவலைகள், |
| take any medicine, | நீங்கள் ஏதாவது மருந்து எடுத்துக் கொண்டாலும், |
| suffer from any illness or disease, | நீங்கள் ஏதாவது நோய் அல்லது சுகவீனத்தால் அவதியுற்றாலும், |
| have any, medical records or X-rays with you, | உங்களிடம் ஏதாவது மருத்துவ பதிவுகள் அல்லது எக்ஸ்ரேக்கள் இருந்தாலும், |
| are a woman who thinks she is or may be pregnant, | நீங்கள் ஒரு கர்ப்பிணி பெண்ணாகயிருந்தாலோ அல்லது கர்ப்பமாகயிருக்கக்கூடும் என்று எண்ணினாலோ, |
| *please tell the doctor when you arrive at the clinic.* | *நீங்கள் மருத்துவக்கூடத்திற்கு வந்தவுடன் அதை தயவு செய்து மருத்துவரிடம் தெரிவிக்கவும்.* |
| The Health Check<br>*consists of several tests* | உடல்நலக் கண்காணிப்பு<br>*பல பரிசோதனைகளைக் கொண்டது.* |
| **Physical examination** | **உடல் பரிசோதனை** |
| **Blood Test:** | **இரத்தப் பரிசோதனை:** |
| A small amount of blood is taken to check for infections and other disease. Blood is taken only once. | சிறிதளவு இரத்தம் எடுக்கப்பட்டு, நோய்த்தொற்று மற்றும் பிறநோய்க்கான பரிசோதனை செய்யப்படும். இரத்தம் ஒரு முறை மட்டுமே எடுக்கப்படும். |
| **Urine Test:** | **சிறுநீர் பரிசோதனை:** |
| Urine is tested for infections, parasites and other diseases. The test is only done once. | நோய்த்தொற்று, ஒட்டுண்ணி மற்றும் பிறநோய்க்கான சிறுநீர் பரிசோதனை செய்யப்படும். பரிசோதனை ஒரு முறை மட்டுமே செய்யப்படும். |

| | |
|---|---|
| **Faeces (Stool) Test:** | **மலப் பரிசோதனை:** |
| Faeces are tested for worms and infection. One sample each day for three days. Sometimes a fourth sample is necessary. The Clinic Doctor will provide details of how to collect urine and faeces in the specimen container. | புழுக்கள் மற்றும் நோய்த்தொற்றிற்காக மலப் பரிசோதனை செய்யப்படும். தினம் ஒரு மாதிரி வீதம் மூன்று நாள் செய்யப்படும். சிலசமயம் நான்காவது மாதிரியும் தேவைப்படலாம். எவ்வாறு மாதிரிக் குடுவையில் சிறுநீர் மற்றும் மலத்தை சேகரிப்பது என்று மருத்துவக்கூட மருத்துவர் விவரம் அளிப்பார். |
| **TB Test:** | **டிபி பரிசோதனை:** |
| A small injection is given under the skin in your right forearm-this will show if you have been exposed to/or have TB. You will need to get this done three days before your clinic appointment, at a Diagnostic Medlab centre. When you come to the clinic, the doctor will read the results of your skin test. This test is safe for women, babies and children and in pregnancy. | உங்களுக்கு ஏற்கனவே டிபி உள்ளதா/அல்லது அதற்கான வாய்ப்பு உள்ளதா என்று கண்டறிய சிறிதளவு ஊசி மருந்தை உங்களுடைய வலது கையின் கீழ்புறத் தோலில் செலுத்துவார்கள். இதை நீங்கள் மருத்துவ முன்அனுமதி பெறுவதற்கு மூன்று நாட்கள் முன்னர் டயக்னாஸ்டிக் மெட்லாப் மையத்தில் செய்து முடித்திருக்கவேண்டும். நீங்கள் மருத்துவக்கூடத்திற்கு வரும் போது, மருத்துவர் உங்கள் தோல் பரிசோதனையின் முடிவுகளை படிப்பார். இந்த பரிசோதனை முறை பெண்கள், சிசுக்கள், குழந்தைகள் மற்றும் கர்பிணிகளுக்கு பாதுகாப்பானது. |
| **Chest X-ray:** | **மார்பு எக்ஸரே:** |
| (To check for TB) is taken at the Clinic. This is for everyone 12 years and over-except for any woman who is pregnant. | (டிபி பரிசோதனைக்காக) மருத்துவக்கூடத்தில் எடுக்கப்படும். இது 12 வயது, அதற்கும் மேலே உள்ளவர்களுக்கு-கர்ப்பிணிகள் தவிர அனைவருக்கும் உண்டு. |
| Examinations | பரிசோதனைகள் |
| It is important for your health that you come for the medical screening and complete the blood, urine and faeces tests. | உங்கள் உடல்நலத்திற்காக நீங்கள் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் இரத்தம், சிறுநீர் மற்றும் மல பரிசோதனைகளை செய்வது அவசியம். |
| Medical Information | மருத்துவத்தகவல் |
| All medical information is confidential between you and the Clinic Doctor. Referrals are only made with your agreement. | உங்களுக்கும் மருத்துவருக்கும் இடையிலான மருத்துவத்தகவல்கள் அனைத்தும் இரகசியமானது. உங்கள் ஒப்புதலின் பேரில் மட்டும் அவை வெளியிடப்படும். |
| Further Medical Care | உயர்மருத்துவப் பாதுகாப்பு |
| It is important that you register with a Family Doctor as soon as you settle into your new area, so that you are included in the New Zealand health care system. | நியூஸிலாந்து உடல்நல பாதுகாப்புத் துறையில் நீங்கள் இணைக்கப்பட, புது இடத்தில் குடியமர்ந்தவுடன் நீங்கள் ஒரு குடும்ப மருத்துவரிடம் பதிவு செய்யவேண்டியது முக்கியம், |
| The Clinic Doctor will give you your personal medical records-you should take these to a family doctor that you choose. | மருத்துவக்கூட மருத்துவர் உங்களுடைய தனிப்பட்ட மருத்துவப் பதிவுகளை உங்களிடம் அளிப்பார்-நீங்கள் தேர்ந்தெடுக்கும் குடும்ப மருத்துவரிடம் இதை எடுத்துச் செல்ல வேண்டும். |
| Please take care of your medical records-it is an important document that contains your personal medical details. | தயவு செய்து உங்கள் மருத்துவப் பதிவுகளை பாதுகாக்கவும்-இது உங்களுடைய மருத்துவ ரீதியான தகவல்களைக் கொண்ட முக்கிய ஆவணமாகும். |
| The Clinic Doctor may refer you to hospital for further treatment. We will give the hospital your new address and they will send you the time and date of your Hospital Clinic appointment. | மருத்துவக்கூட மருத்துவர் உங்களை உயர்மருத்துவத்திற்காக மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கக்கூடும். நாங்கள் உங்களுடைய புது முகவரியை மருத்துவமனைக்கு அளிப்போம் பிறகு அவர்கள் தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு உங்களின் மருத்துவமனை முன் அனுமதியை அனுப்புவார்கள். |

| | |
|---|---|
| It is your responsibility to attend any appointment. | எந்த ஒரு முன்அனுமதி ஏற்பாட்டிற்கும் வருகை தருவது உங்கள் பொறுப்பு. |
| Please remember that there will be a long waiting list (unless the problem is urgent) and you may have to wait several months to be seen-the hospital will tell you this. | ஒரு நீண்ட காத்திருப்போர் பட்டியல் இருக்கும் என்பதை தயவு செய்து நினைவில் கொள்க (உங்களுடைய பிரச்சினை அவசரம் என்றால் மட்டுமே) உங்கள் முறைக்காக நீங்கள் பல மாதங்கள் காத்திருக்க நேரிடும்-இதை மருத்துவமனை உங்களுக்குத் தெரிவிக்கும். |
| Working with the people of Auckland, Counties Manukau and Waitemata | ஆக்லாந்து மக்களுடன் பணிபுரியும், மனுகௌ மற்றும் வைத்தெமாதா மாநிலங்கள் |